Co-operative Societies and Co-operative Stores

* 16 *Q.*—SRI M. SUBBIAH CHETTIAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of co-operative societies and co-operative stores working before the Second Plan period; and

(*b*) the number that came into being during the Second Plan period?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) 30-6-1956 அன்று பதினைந்தாயிரத்து முன்னூற்று எண்பத்தொன்பது கூட்டுறவு சங்கங்களும், அறுநூற்றியேழு கூட்டுறவு ஸ்டோர்களும் இருந்தன.

(ஆ) 1-7-1956 முதல் 30-6-1961 முடிய நாலாயிரத்து அறுநூற்றிரண்டு கூட்டுறவு சங்கங்களும், நூற்றி அறுபது கூட்டுறவு ஸ்டோர்களும் பதிவு செய்யப்பட்டன.

திரு. எம் சுப்பையா செட்டியார்: கூட்டுறவு ஸ்டோர்களைப் பொறுத்தவரையில் சரிவர நடக்கவில்லை என்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கூட்டுறவு ஸ்டோர் என்று சொன்னால் சிலது சரியாக நடத்தமுடியவில்லை. 'ஓப்பன்' மார்க்கெட்டில் சாமான்கள் வாங்கும்போது போட்டிகள் ஏற்படுகின்றன. மற்றவர்களுடன் போட்டி போடவேண்டி இருப்பதால் மூட வேண்டிய நிலையிலே இருந்து வருகிறது. மற்றபடி வேறு சங்கடங்கள் இல்லை.

திரு. எம். சுப்பையா செட்டியார்: கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்தவரையில், அவற்றின்மூலம் ஜனங்களுக்குக் குறைந்த விலையில் சாமான்கள் விற்கப்படுவதாக சர்க்காரில் சொல்லப்படுகிறது. குறைந்த விலையில் விற்கும்போது ஏன் போட்டி ஏற்படுகிறது?

கனம் திரு. என். நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: கூட்டுறவு ஸ்டோர் என்று சொன்னாலும் சாமான்களை அது வெளியில்தான் வாங்கவேண்டியிருக்கிறது.

Co-operative Societies

* 17 *Q.*—SRI A. K. THANGAVEL MUDALIAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to convert the Primary Agricultural Co-operative Societies which are not limited into limited societies; and

(*b*) if not, whether there is any proposal to give guarantee to the unlimited Primary Agricultural Co-operative Societies?

28th February 1963]

கனம் திரு. என். நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார்:

(அ) இல்லை.

(ஆ) வினு எழாது.

Property-tax

*18 Q.—Sri S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether there is any proposal to fix the maximum percentage of property-tax to be collected by the Municipalities; and

(b) if so, the details thereof?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்:

(அ) இல்லை, ஐயா.

(ஆ) கேள்வி எழாது.

திரு. எஸ். கே. சம்பந்தன்: நகரசபைகளில் விதிக்கக்கூடிய வரிகளுக்கு ஏதாவது வரம்பு வைப்பதற்கு அரசாங்கம் இப்போது இல்லையென்றாலும் இனிமேல் தீர்மானிக்க உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: அப்படி ஒன்றும் செய்வதாக இல்லை.

திரு. எம். சுப்பையா செட்டியார்: பொதுவாக எத்தனை பர்சென்ட் விதிக்கலாம் என்ற விதியிருக்கிறதா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: கார்ப்பரேஷன் 15½ சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம் விதிக்க சட்டத்தில் இடமிருக்கிறது. முனிசிபல் ஆக்டில் அப்படியில்லை.

திரு. எம். சுப்பையா செட்டியார்: வரி விதிப்பதில் பல தவறுகள் ஏற்படுவதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: அப்படி ஏதாவது நடந்திருப்பதாக கனம் அங்கத்தினருக்குத் தோன்றினுல் அதை சர்க்காருக்குத் தெரிவிக்கலாம். அப்பொழுது அது கவனிக்கப்படும்.

திரு. கே. ராமதாஸ்: சென்னை நகரத்தில் நகரசபையில் ஆளும் கட்சியாக உள்ளவர்கள், நிர்வாகத்தினர்கள், சர்க்கார் சொத்து வரியை உயர்த்தியிருக்கிறுர்கள் என்று பிரசாரம் செய்துவருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத்: தகவல் இல்லை.

Mr. CHAIRMAN: Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.] 3-10 p.m.

III.—ANNOUNCEMENTS.

(I) MESSAGE FROM THE ASSEMBLY.

Mr. CHAIRMAN: I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras